வெ.எண்:28/ஜுன் நாள்: 24.06.2021

**தருமபுரி இலக்கியம்பட்டி செவித்திறன் குறைபாடு உடைய அரசு மேல்நிலைப்பள்ளியில் 1000 மாற்றுத்திறனாளிகளுக்கான கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ச.திவ்யதர்சினி இஆப., அவர்கள் ,தொடங்கி வைத்தார்.**

தருமபுரி இலக்கியம்பட்டியில் உள்ள செவித்திறன் குறைபாடு உடைய அரசு மேல்நிலைப்பள்ளியில் 1000 மாற்றுத்திறனாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி போடும் சிறப்பு முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ச.திவ்யதர்சினி இஆப., அவர்கள் தொடங்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இஆப., அவர்கள் கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் முன்னுரிமை வழங்கும் வகையில் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்களை அமைக்க உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில், இலக்கியம்பட்டியில் உள்ள செவித்திறன் குறைபாடு உடைய அரசு மேல்நிலைப்பள்ளியில் மாற்றுத் திறனாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி போடும் சிறப்பு தடுப்பூசி முகாம் அமைத்து 1000 மாற்றுத்திறனாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் சுமார் 11,435 மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். இதுவரை 2000 மாற்றுத்திறனாளிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. லக்கியம்பட்டியில் உள்ள செவித்திறன் குறைபாடு உடைய அரசு மேல்நிலைப்பள்ளியில் வாரந்தோறும் வியாழக்கிழமை மாற்றுத்திறனாளிகள் சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்தப்படும் மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பாக அமைப்படும் கொரோனா சிறப்பு தடுப்பூசி முகாமினை மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தி கொண்டு கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வரவேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு பணிக்கு செல்லும் அனைவரும் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். கொரோனா தடுப்பூசி முகாம் பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைகள், அனுமந்தபுரம், மொரப்பூர், சின்னாங்குப்பம், பையர்நத்தம், நாகதாசம்பட்டி, ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், நல்லம்பள்ளி நகர்ப்புற சுகாதார நிலையம் மற்றும் தருமபுரி அரசு கலைக்கல்லூரி உள்ளிட்ட 57 இடங்களில் கொரோனா தடுப்பூசி இலவசமாக போடப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் 2,20,190 தடுப்பூசி வரப்பெற்று இதுவரை 2,17,083 தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

18 வயதிற்கு மேற்பட்டோர் ஒவ்வொருவரும் தடுப்பூசி போட்டுக் கொண்டு நண்பர்கள், உறவினர்கள், அருகில் உள்ளவர்கள் அனைவரையும் தடுப்பூசி போட்டு கொள்வதற்கு அறிவுரை வழங்கிட வேண்டும். எந்தவித பக்கவிளைவும் ஏற்படுத்தாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். உடலில் வேறு ஏதேனும் நோய் இருப்பின் மருத்துவரின்

ஆலோசனைக்கு பின் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம். நமது உயிருக்கு ஒரு பாதுகாப்பு அரணாக இந்த தடுப்பூசி விளங்கும். 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்வதன் மூலம் தங்களையும், தங்கள் குடும்பத்தையும், சமுதாயத்தையும் கொரோனா நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம். மேலும் முககவசம் அணிதல், தனிமனித இடைவெளி கடைப்பிடித்தல், கைகளுக்கு அடிக்கடி கிருமிநசினி பயன்படுத்துதல் போன்றவை கொரோனா தெற்று பரவலை தடுக்க முன் வர வேண்டும் தற்போது பொதுமக்கள் தேவையின்றி வெளியே வர வேண்டாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.பூ.இரா.ஜெமினி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்)(பொறுப்பு) மரு.ரமேஷ் கண்ணன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.சரஸ்குமார்,மருத்துவர்கள், செவிலியர்கள் , 1000த்திற்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**